# சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.2 , ஜெயங்கொண்டம்

அசல் வழக்கு எண்.294/2024

நாள்: 09.09.2026

வா.சா. 2 – மணிவண்ணன்

2026–ம் ஆண்டு செப்டம்பர் 09–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தனஞ்செயன், கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் கரடிகுளம் மேலத்தெருவில் வசித்து வருகிறேன். வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் எனக்கு உறவினர்கள் தான். வாதி, பிரதிவாதிகள் குடும்ப விவரம் எனக்கு நன்றாக தெரியுமா என்றால் சுமராக தெரியும். வாதி காமராஜும் அவருடைய அண்ணன் ராஜாவும் பாகம் பிரித்துக் கொண்டார்களா என்றால் பிரித்துக்கொண்டார்கள். அந்த பாகப் பிரிவினையின் போது நானும் உடன் இருந்தேன். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். தாவா சொத்துகள் பாகப் பிரிவினையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா சொத்து யாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் ராஜாவுக்கு ஒதுக்கப்பட்டது. ராஜா இறந்து 10 ஆண்டுக்கு மேல் ஆகிறது. பாகப்பிரிவினை ஏற்பட்டது எப்போது என்றால் ஞாபகமில்லை. சுமார் 10 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும். பாகப் பிரிவினையின் போது ராஜா உயிரோடு இல்லை. வாதி காமராஜ்க்கு பழைய வீடு கீழத்தெருவில் உள்ளது. தாவா சொத்து மேலத்தெருவில் உள்ளது. தாவா சொத்துக்கான வீட்டின் வாசல் வடக்கு பார்த்து உள்ளது. தாவா வீட்டில் 1ம் பிரதிவாதியின் கணவர் மாணிக்கம் வசித்து வந்து வீட்டுவரி மற்றும் மின் இணைப்பு பெற்று அனுபவம் செய்து வந்தார் என்றால் தெரியாது. தாவா

சொத்திற்கான பட்டாவும் மாணிக்கம் பெயரில் உள்ளது என்றால் தெரியாது. மாணிக்கம் இறந்தபிறகு அவருடைய வாரிசுகளான 1 முதல் 4 பிரதிவாதிகள் பெயரில் பட்டா உள்ளது என்றால் தெரியாது. தாவா சொத்தில் வாதி காமராஜ் குடியிருக்கவில்லை என்றாலும் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.2,
ஜெயங்கொண்டம்.